## உங்கள் பொறுப்புக்கள்

எங்கள் நோயாளி என்னும் முறையில் உங்கள் நலன்களைப் பேணும் பொறுப்பு எங்களுக்கு இருக்கும் அதே வேளையில், ஒட்டுமொத்த சிகிச்சை நடவடிக்கையில் நீங்கள் உங்கள் பங்கை ஆற்றுவதும் முக்கியம். உங்கள் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் உங்கள் குடும்பத்தாரின் கவலைகளைப் போக்கும் வகையிலும் இயன்ற அளவு சிறந்த பராமரிப்பை உங்களுக்கு வழங்க விரும்புகிறோம். நீங்களும் உங்கள் குடும்பமும் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்:

1. உங்கள் மருத்துவ வரலாறு (ஒவ்வாமைகள், நீங்கள் உட்கொள்ளும் மருந்துகள் உட்பட), நிதி நிலைமைகள், நாங்கள் உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவக் கூடிய மற்ற பொருத்தமான விவரங்கள் ஆகிய தகவல்களை முழுமையாக வழங்குதல்.
2. எங்கள் சுகாதாரப் பராமரிப்பாளர்கள் உங்களுக்கு வகுத்துத் தரும் சிசிச்சைத் திட்டங்களைப் பின்பற்றுதல்.
3. சிகிச்சைத் திட்டங்களைப் பின்பற்றவிடாமல் உங்களைத் தடுக்கும் பிரச்னைகளை நீங்கள் எதிர்கொள்ளும்போது அவற்றை எங்களுக்குத் தெரிவித்தல்.
4. உங்கள் உடல் நிலையில் மாற்றங்கள் ஏற்படும்போது எங்களிடம் தெரிவித்தல்.
5. உங்களுக்கு வழங்கப்படும் மருத்துவச் சேவைகளுக்குத் தேவையான கட்டணங்களைச் செலுத்துவதில் பொறுப்புடன் நடந்து கொள்ளுதல்.
6. உங்கள் பராமரிப்புப் பற்றிய உங்கள் விருப்பங்களை நீங்கள் எங்களிடம் தெரிவிக்க இயலாத நிலை ஏற்பட்டால், அவற்றைப் பிரதிநிதிக்கக் கூடிய முடிடுெப்பவர் ஒருவரை நியமித்தல்.
7. ஊழியர்கள், மற்ற நோயாளிகள், பார்வையாளர்கள் அனைவரையும் உரிய மரியாதையுடனும் பணிவன்புடனும் நடத்துதல்.
8. பார்வையாளர்கள் தொடர்பான கொள்கை போன்ற மருத்துவமனை விதிகளைப் பின்பற்றுதல்.
9. அறிவுறுத்தப்படுவது எதுவும் புரியாவிட்டால் கேள்வி கேட்பது. அப்போது தான் மருத்துவமனையிலிருந்து சென்ற பிறகு வீட்டில் உங்களை நீங்களே பார்த்துக்கொள்ள முடியும் என்பது எங்களுக்குத் தெரியும்.

## கருத்துத் தெரிவித்தல்

எங்கள் நோயாளிகளின் நன்மைக்காக எங்கள் சேவைகளை மேம்படுத்தும் எங்கள் தொடர் முயற்சிகளுக்கு உதவ உங்கள் கருத்துக்களை நாங்கள் மதிக்கிறோம். நீங்கள் ஏதும் யோசனை கூற அல்லது எங்கள் சேவைகள் பற்றிய உங்கள் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்பினால், நீங்கள் கருத்தறியும் படிவத்தை நிரப்பலாம் அல்லது தொலைபேசி எண் 6326 5350–ல் எங்கள் சேவைத் தர நிர்வாகப் பிரிவை அழைக்கலாம். நீங்கள் எங்கள் இணையத் தளமான www.sgh.com.sg வழி எங்களுக்கு மின்னஞ்சலும் அனுப்பலாம்.

**எங்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பதற்கு உங்களுக்கு நன்றி கூறுகிறோம். SGH–ல் நீங்கள் தங்கியிருக்கும் காலம் அல்லது உங்கள் வருகை ஓய்வும் இனிமையும் மிக்கதாக அமைய எங்கள் வாழ்த்துக்கள். உதவுவதே எங்கள் ஊழியர்களின் கடமை. எனவே உங்கள் தங்கல் அல்லது வருகையை நாங்கள் மேலும் வசதிமிக்கதாக்க இயலுமானால் அன்புகூர்ந்து எங்களை அணுகுங்கள்.**

1. மருத்துவ முன் உத்தரவு என்பது, நீங்கள் அந்திமக்கால நோயினால் பீடிக்கப்பட்டு நினைவிழந்திருக்கும் நிலையில், உங்கள் உயிர் பிரிந்துவிடாமல் நிறுத்தி வைக்க உதவும் சிகிச்சை முறை ஏதும் வேண்டாம் என்று உங்களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவருக்குத் தெரிவிக்க நீங்கள் முன்கூட்டியே கையொப்பமிடும் ஒரு சட்டபூர்வ ஆவணம்.
2. மின்னியல் மருத்துவப் பதிவேட்டுப் பரிவர்த்தனை நிலையம் (EMRX) என்பது சுகாதார அமைச்சு மற்றும் இரு மருத்துவப் பராமரிப்புக் குழுக்களான சிங்ஹெல்த்தும் (SGH இதன் ஒரு பகுதி) தேசிய சுகாதாரப் பராமரிப்புக் குழுவும் சிங்கப்பூரில் உள்ள பொது மருத்துவமனைகளும் பலதுறை மருந்தகங்களும் மின்னியல் மருத்துவப் பதிவேடுகளைப் பகிர்ந்துகொள்வதற்காக ஏற்படுத்திய ஒரு திட்டம். EMRX, உங்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் மருத்துவ ஊழியர்கள் உங்கள் தனிப்பட்ட மருத்துவத் தேவைகளுக்கு இன்னும் சிறப்பாகவும் விரைவாகவும் ஈடுகொடுக்க உதவும். பின்வரும் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும்:

- நீங்கள் அண்மையில் மருத்துவமனையில் தங்கிப் பெற்ற சிகிச்சை பற்றிய சுருக்கமான விவரங்கள்
- பரிசோதனைக்கூட, எக்ஸ்ரே மற்றும் பிற கதிரியக்கச் சோதனை முடிவுகள்
- அறுவைச் சிகிச்சை அறிக்கைகள்
- பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள்

முன் மருத்துவ உத்தரவு மற்றும் EMRX பற்றி மேலும் தெரிந்துகொள்ள அன்புகூர்ந்து www.moh.gov.sg என்னும் முகவரியில் சுகாதார அமைச்சின் வலைத்தளத்துக்கு வருகைபுரியுங்கள்.

சிங்கப்பூர்ப் பொது மருத்துவமனை
ஊட்ரம் ரோடு
சிங்கப்பூர் 169608
www.sgh.com.sg

பதிவு எண் 198705907Z
முதல் பதிப்பு 2004 டிசம்பர்

சிங்ஹெல்த் குழு உறுப்பினர்கள்
• சாங்கி பொது மருத்துவமனை • கே கே மாதர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை • சிங்கப்பூர்ப் பொது மருத்துவமனை • சிங்கப்பூர்த் தேசியப் புற்றுநோய் மையம் • தேசியப் பல் மருத்துவ மையம் • தேசிய இதய மையம் • தேசிய நரம்பியல் மையம் • சிங்கப்பூர்த் தேசியக் கண் மையம் • சிங்ஹெல்த் பலதுறை மருந்தகங்கள்

*A Tradition of Caring and Excellence*

# நோயாளிகளுக்கு எங்கள் கடப்பாடு

Singapore General Hospital
SingHealth

# நோயாளிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தின் நலன்களைப் பேணுதல்

சிங்கப்பூர்ப் பொது மருத்துவமனை (SGH) தன் நோயாளிகளுக்குத் தரமான சேவைகள் வழங்குவதிலும் மிகச் சிறந்த விளைவுகளை உறுதி செய்வதிலும் கடப்பாடு கொண்டுள்ளது. பரிவு, மதிப்பு, கண்ணியம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த தரமான சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதன் வழி எங்கள் நோயாளிகளான உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் சேவையாற்றுவதையே நாங்கள் நோக்கமாகக் கொண்டிருக்கிறோம். உங்களுக்குச் சுகாதாரப் பராமரிப்பு வழங்குபவர் என்னும் முறையில், எங்கள் மருத்துவத் தொழிலர்கள், உங்கள் வயது, இனம், மொழி, சமயம் அல்லது சமூக அந்தஸ்து எதுவாக இருந்தாலும், உங்கள் நோயைக் குணப்படுத்தவும் உங்கள் நலனைப் பேணவும் பாடுபடுகிறார்கள்.

## பராமரிப்பும் மரியாதையும்

1. SGH–ல், நீங்கள் மனிதாபிமானம் மிக்க, பாதுகாப்பான ஒரு சூழலில் கண்ணியத்துடன் நடத்தப்படுவீர்கள். உங்கள் பாதுகாப்பு என்று கூறும்போது, உங்கள் ஒட்டுமொத்த மருத்துவச் சிகிச்சையின் ஒரு பகுதியாகத் தேவைப்பட்டாலன்றி, தடைகள் அல்லது தனிமைப்படுத்தப்படுதல் இன்றியிருத்தலும் அடங்கும். உடற்குறையுள்ளவர்கள், முதியவர்கள் மற்றும் சிறப்புத் தேவையுள்ளவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும்.
2. உங்கள் சொந்த மதிப்பீடுகள், சமய மற்றும் இன நம்பிக்கைகள், அந்தரங்கத்திற்கான தேவை ஆகியவற்றை நாங்கள் மதிக்கிறோம். உங்கள் சமய மற்றும்/அல்லது இனப் பழக்க வழக்கங்களை, அவை பிணக்கு அல்லது சச்சரவை ஏற்படுத்தாத வரை, நீங்கள் பின்பற்றலாம். இதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், அன்புகூர்ந்து வார்டில் உள்ள உங்கள் தாதியிடம் தெரிவியுங்கள். அவர் சமய ஆலோசகர் ஒருவர் உங்களை வந்து காண ஏற்பாடு செய்வார்.
3. ஒரு கடுமையான நோய்க்கான மருத்துவச் சிகிச்சை பற்றி முடிவுகள் செய்வது உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் சிரமமாக இருக்கலாம். தேவைப்பட்டால் உயிரியல் நன்னெறிக் குழுச் செயலகம், நோயாளிகள் மற்றும் குடும்பத்தார் விருப்பங்களுக்கு ஈடுகொடுப்பதில் உள்ள பிரச்னைகளைப் பற்றிப் பரிசீலிக்கும். நீங்கள் உங்கள் முன் மருத்துவ உத்தரவைச்[1] செய்திருந்தால் அதற்கேற்ப நீங்கள் செய்திருக்கும் முடிவுகளை நாங்கள் மதித்து அவற்றுக்குக் கட்டுப்படுவோம்.

## ரகசியத் தன்மையும் அந்தரங்கமும்

1. நீங்கள் SGH–ல் ஒரு நோயாளியாக இருக்கும்போது நாங்கள் உங்கள் வருகை பற்றிய பதிவேடுகளைப் பேணுவோம். மின்னியல் மருத்துவப் பதிவேடுகள்[2] மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் அனைத்து அம்சங்களும் உட்பட, உங்கள் மருத்துவப் பதிவேடுகளை முற்றிலும் ரகசியமாக வைத்திருக்க சட்டப்படியும் தொழில் நன்னெறிக்கேற்பவும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.
2. இந்தத் தவகல்கள் உங்களுக்குப் பராமரிப்பு வழங்குபவர்களுடன் மட்டுமே பகிர்ந்துகொள்ளப்படும்.
3. மருத்துவமனைச் செயற்பாடுகளுக்காக, எடுத்துக்காட்டாக எங்கள் ஊழியர்கள் உங்களுக்கு அளித்த சேவையைக் கண்காணிப்பது போன்றவற்றுக்காக, மருத்துவமனை நிர்வாகத்தின் மற்ற ஊழியர்களும் இத்தகவல்களைப் பகிர்ந்துகொள்ளலாம்.
4. SGH, சுகாதாரப் பராமரிப்புத் தொழில்துறையின் வருங்காலத் தலைமுறையினருக்குப் பயிற்சியளிக்கும் ஒரு மருத்துவமனை. அதோடு இவ்வட்டாரத்தில் மருத்துவ ஆராய்ச்சிக்கான ஒரு பெரிய நிலையமும் கூட. சட்டம் அல்லது மருத்துவமனையின் அதிகாரத்திற்குட்பட்டு, மருத்துவ ஆராய்ச்சிக்காகவும் பயிற்சிக்காகவும் மருத்துவப் பதிவேடுகளைப் பார்வையிடும் தேவை இருக்கலாம். எனினும் உங்கள் பதிவேடுகளைப் பார்வையிடுவோருக்கு அவற்றை வேறு யாரிடமும் தெரிவிக்காமலிருக்கும் சட்டபூர்வக் கடமை உள்ளது.
5. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், எடுத்துக்காட்டாகத் தொற்றுநோய்கள் பற்றி அறிவிக்கும் தேவையேற்படும்போது, சட்டப்படி இத்தகவல்களை வெளியிட வேண்டிய தேவை எங்களுக்கு எழலாம்.
6. மேற்குறிப்பிட்டவை தவிர்த்த மற்ற நேரங்களில் நாங்கள் மற்றவர்களுக்கு இத்தகவல்களைத் தெரிவிக்க வேண்டிய தேவையேற்பட்டால், உங்களிடமிருந்து எழுத்துபூர்வமான அனுமதி பெறுவோம்.
7. மருத்துவ ஆலோசனை, பரிசோதனை, சிகிச்சை, நோய் பற்றிய விவாதம் ஆகியவற்றை நாங்கள் சங்கடமூட்டாத முறையிலும் உங்கள் அந்தரங்கத் தன்மைக்கு மரியாதையளித்தும் மேற்கொள்வோம்.

## உங்கள் சிகிச்சை பற்றிய விளக்கமும் தகவலும்

1. உங்கள் நோய் பற்றி தகவல்களைத் தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு. இது உங்களுக்குப் புரியும் வகையில் உங்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும். இந்தத் தகவல்களில், அவசர நேரங்களிலும் பொருத்தமான இடங்களிலும் தவிர, பின்வருவன அடங்கும்:
   - சிகிச்சைத் தேர்வுரிமைகள் (அறுவைச் சிகிச்சை உட்பட)
   - தெரிந்த விளைவு
   - சிகிச்சை பற்றிய தெரிந்த ஆபத்துகள்
   - சிகிச்சையளிக்கப்படாவிட்டால் ஏற்படக் கூடிய ஆபத்துகளும் விளைவுகளும்
   - உத்தேச மருத்துவமனைக் கட்டணங்கள்
   - நீங்கள் மருத்துவமனையிலிருந்து சென்ற பின்னர் உங்கள் தொடர் பராமரிப்புக்கான திட்டம்
   - உங்கள் சிகிச்சைக்குப் பொறுப்பான சுகாதாரப் பராமரிப்புத் தொழிலர்களின் பெயர்கள்
2. மேலும், நீங்கள் பின்வருவனவற்றையும் கோரலாம்:
   - மருத்துவமனையின் கொள்கைக்கு இணங்க உங்கள் மருத்துவ அறிக்கையின் பிரதி
   - உங்கள் மருத்துவமனைக் கட்டணங்கள் பற்றிய விளக்கம்
   - ஏதாவது கூடுதல் தகவல்கள் அல்லது உங்கள் மருத்துவமனைத் தங்கல் பற்றி உங்களுக்கு எழக்கூடிய கேள்விகளுக்கான விளக்கம்
4. வழங்கப்படும் தகவல்கள் உங்களுக்கு யோசனை கூறப்பட்ட சிகிச்சை முறைக்கு ஒப்பதல் அளிக்கும் அல்லது நிராகரிக்கும் முடிவை நீங்கள் எடுப்பதற்கு உதவும்.
5. எனினும், சட்டம் அனுதிக்கும் வரம்புக்கு உட்பட்டு நீங்கள் சிகிச்சைக்கு உட்படதிருப்பதை அல்லது மருத்துவரின் ஆலோசனைக்கு எதிராக மருத்துவமனையை விட்டு வெளியேறுவதைத் தேர்ந்தெடுத்தால், மருத்துவ ஆலோசனைக்கு எதிராக மருத்துவமனையைவிட்டுச் செல்லக் கோரும் படிவம் ஒன்றில் கையொப்பமிட்ட பின்னர் நீங்கள் அவ்வாறு செய்யலாம்.
6. உங்கள் முடிவினால் ஏற்படக் கூடிய விளைவுகளுக்கான முழுப் பொறுப்பையும் நீங்களே ஏற்பீர்கள்.

## ஆராய்ச்சி

மருத்துவ ஆராய்ச்சியில் மனிதர்களை ஆராயச்சிப் பொருளாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முன் இந்த ஆராய்ச்சித் திட்டத்தில் பங்கேற்பதற்கான நோயாளியின் எழுத்துபூர்வ ஒப்புதலை நாங்கள் பெறவேண்டும். நீங்கள் பங்கேற்க மறுக்கலாம் அல்லது ஒப்புதல் அளித்த பின் ஆராய்ச்சித் திட்டத்தின் எந்தக் கட்டத்திலும் அதிலிருந்து விலகிக் கொள்ளலாம். பங்கேற்க வேண்டாம் என்னும் உங்கள் முடிவு உங்களுக்கு உரிமையுள்ள பராமரிப்பு நிலையை எந்த வகையிலும் பாதிக்காது.

## உறுப்பு தானம்

இதயம், ஈரல், சிறுநீரகம் போன்ற உறுப்புக்கள் செயலிழப்பதால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு மேலும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை அளிப்பதற்கான ஒரே வழி உறுப்பு தானமே. HOTA எனப்படும் மனித உறுப்பு மாற்றுச் சட்டம், மருத்துவமனைகளில் இறப்பவர்களின், வழக்கமாக விபத்து, மூளையில் ரத்தக் கசிவு, மூளையில் கட்டி போன்ற காரணங்களால் இறப்பவர்களின் உறுப்புக்களை உறுப்புமாற்றுச் சிகிச்சைக்காக அகற்றுவதை அனுமதிக்கிறது. 21–க்கும் 60–க்கும் இடைப்பட்ட வயதுடைய முஸ்லிம் அல்லாதாருக்குப் பொருந்தும் இந்தச் சட்டம் நோயாளிகள் பலர் மீண்டும் வழக்கமான, சுறுசுறுப்பு மிக்க வாழ்க்கை வாழ வழி செய்கிறது.

இறந்த பிறகு தங்கள் உறுப்புக்கள் எதையும் தானம் செய்ய விரும்பாதவர்கள் HOTA–விலிருந்து விலகிக் கொள்ளலாம். அவர்களுடைய விருப்பம் மதிக்கப்படும். விலகுவதற்கான படிவத்தை மருத்துவமனை மற்றும் பலதுறை மருந்தகங்களிலிருந்து அல்லது உறுப்பு நன்கொடையாளர் பதிவகம், மே/பா புளோக் 3, அறை 9, சிங்கப்பூர் 169608 (தொலைபேசி எண் 63214390) என்னும் முகவரியில் பெறலாம். மேல் விவரங்களுக்கு அன்புகூர்ந்து HOTA நேரடித் தொலைபேசி 1800–2254 122–ஐத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது www.moh.gov.sg என்னும் முகவரியில் சுகாதார அமைச்சின் வலைத்தளத்துக்கு வருகைபுரியுங்கள்.